# சார்பு நீதிமன்றம், நெய்வேலி

## OS.No.85/2019

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **அம்பிகா (DW-1)** | | |
| கணவர் பெயர் | : **ஆப்ரஹாம்** | தொழில் : | **பணி ஓய்வு என்எல்சி** |
| கிராமம் | : **நெய்வேலி நகரம்** | வயது : | 59 |
| தாலுக்கா | : **குறிஞ்சிப்பாடி** | | |
| தேதி | : **28.10.2024** | | |

2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28 ம் நாளாகிய இன்று சாட்சியாகி பி.வா.சா.1. இன் வாக்குமூலம் (1873 ம் ஆண்டின் 10 ஏற்பாட்டின் படி) திருமதி.S.உமா மகேஸ்வரி, சார்பு நீதிபதியால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் பிரதிவாதியாவேன். எனது முதன்மை சாட்சியத்திற்கு பதிலாக சத்திய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்திருக்கிறேன். அதில் சொல்லியுள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்து அந்த சங்கதிகளை நான் புரிந்துகொண்டு சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்திருக்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள 1 முதல் 5 ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்ய கேட்டுக் கொள்கிறேன். பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணங்கள் **பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**